INDIA TODAY - TAMIL (JULY 2009)




# தடையில்லா பயணம்

## எல்.கணேஷ்

55, தலைவர், ரானே குழுமம்

வாகனங்களையும் உதிரிபாகங்களையும் 1929ம் ஆண்டில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் சிறு நிறுவனமாகத் துவங்கியது ரானே. 1950களின் மத்தியில் ரானே (மெட்ராஸ்) நிறுவனம் உதயமானது. 1970களில் படித்து முடித்தவுடன் இளம்பொறியாளராக கணேஷ் இதில் சேர்ந்தார். இவரது சகோதரர் எல்.லட்சுமணன் உடன் இணைந்து கடுமையாக உழைத்ததால் இன்று ரானே குழுமம் 8 நிறுவனங்களுடன் ரூ.1400 கோடிக்கு வர்த்தகம் செய்யும் சர்வதேச நிறுவனமாகியிருக்கிறது. உலகெங்கும் 20 நாடுகளில் உள்ள முன்னணி வாகன உற்பத்தி நிறுவனங்களுக்கு முக்கிய உதிரிபாகங்களை ரானே ஏற்றுமதி செய்து வருகிறது. இதன் கீழுள்ள 4 நிறுவனங்கள் உயர்தரத்திற்கான டெமிங் சர்வதேச விருதைப் பெற்றுள்ளன. 2006 ஆம் ஆண்டில் ரானே குழுமத்தின் தலைவராக கணேஷ் ஆனபோது, ஒவ்வொரு நிறுவனமும் சகோதர நிறுவனத்தில் சிறிதளவு பங்குகளைப் பெற்றிருந்தது. இதனால் ஏற்படும் நிர்வாகக் குழப்பங்களைத் தவிர்ப்பதற்காக *ரானே ஹோல்டிங்ஸ்* என்ற புதிய நிறுவனத்தை உருவாக்கி தடம் பதித்துள்ளார்.

*கா.சு. துரையரசு*

**சந்தித்த சவால்கள்:** 1970களிலிருந்து 1990களின் துவக்கம் வரை அரசுத் துறை கட்டுப்பாடுகள் மிகக் கடுமையாக இருந்தன. ஆனால் கொள்கையை நோக்கிய கடும் முயற்சிகளாலும் அறநெறிகளாலும் பிரச்னைகளிலிருந்து மீண்டது.

**இலக்கு:** குறிப்பிட்ட துறையில் நாட்டிலேயே முதலிடம் பிடிப்பது, சர்வதேச சந்தையில் இடம்பிடிப்பது.

**வெற்றி மந்திரம்:** சரியான இலக்கைக் குறிவைத்தல், தன்னம்பிக்கை, வலிமையூட்டுதல், வணிக நெறிகள்.

"உலகமயமாக்கலால் மேற்கத்திய கலாச்சாரம் இந்தியாவுக்குள் பலமாகக் காலூன்றியிருக்கிறது. இதன் தாக்கம் இளைஞர்களிடம் அதிகம். கீழை தத்துவங்கள்தான் நமக்கு சரிப்படும்"